ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1725/16 - 2011 සැප්තැම්බර් 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.09.29

*1725/16 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரான என்னால் தயாரிக்கப்பட்டு இங்கு கீழே காட்டப்பட்டுள்ள துணைவிதி மேற்கூறப்பட்ட பிரிவின் கீழ் இவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், கல்வி, காணி, மின்சாரம் மற்றும் எரிசக்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அத்துடன் பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சர்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மேல் மாகாண, மாகாண சபை,*
*“சிராவஸ்தி கட்டிட வளாகம்”,*
*கொழும்பு 7,*
*2011, செத்தெம்பர் 19.*

## நகரசபை எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைத்திருத்தல் அதற்கான நிலையங்களை அமைத்தல் மற்றும் வாகனங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி நகரசபை அதிகார பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைத்திருத்தல் அதற்கான நிலையங்களை அமைத்தல் மற்றும் அந்நிலையங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காகவுள்ள கட்டணங்களை அறவிடுதல் மற்றும் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான துணைவிதியென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இங்கு இதனகத்துப்பின்னர் தலைவராக எடுத்துக்காட்டப்படும் நகரசபையின் தலைவர் அதிகார பிரதேசத்திற்குள் நுழையும் வாகனங்கள், நிறுத்திவைப்பதற்கும் அல்லது நிறுத்தி வைத்திருப்பதை தடை செய்தல் அல்லது வரையறுத்தல் இல்லையேல் கட்டுப்படுத்தும் ஏதாவது வீதியொன்று, வீதியின் பகுதி ஒன்றில் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் நிலையத்தை குறிப்பிடும் அறிவித்தல் அவ்வீதியில் இல்லையேல் பகுதியொன்றில் பார்க்கும் இடத்திலிருந்து தெளிவாக தெரியக்கூடிய விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியில் காட்டப்பட்டுள்ள அறிவித்தல் ஊடாக வாகனம் நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைப்பதை தடைசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் வாகனமொன்றின் சாரதியினால்,

(அ) எவராவது உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவரினால் அவ்வீதியில் அல்லது வீதியின் பகுதியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்லது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது வாகன சமிக்கைக்கு அல்லது அறிவித்தலுக்கு இசைவாக செயல்படுவதுடன் அல்லது ;

(ஆ) அவ்வீதியின் பகுதியொன்றில் அச்சந்தர்ப்பத்தில் காணப்படும் ஏதாவது வாகனமொன்றின் போக்குவரத்திற்கு ஒழுங்கு முறையிலான விதிகளை உரியமுறைப்படி பின்பற்றப்படுவதுடன் அல்லது ;

(இ) எவராவது ஒருவருக்கு அவ்வாகனத்திலிருந்து கீழே இறங்குவதற்கும் அல்லது அவ்வாகனத்தில் ஏறுவதற்கு இடமளிப்பதுடன் அல்லது ;

(ஈ) அவ்வாகனத்தில் பொருட்களை ஏற்றுவதற்கும் அல்லது அவ்வாகனத்திலிருந்து பொருட்களை இறக்குவதற்கும் அல்லது அப்பணிகளுக்காக தேவையான நேரங்களைத் தவிர்த்த ஏனைய வேலைகளில் அவ்வாகனம் வீதியில் அல்லது வீதியின் பகுதியொன்றில் நிறுத்தி வைத்திருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

4. தலைவரினால் இத்துணைவிதியின் கீழ் விநியோகிக்கப்படும் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் தம்வசம் இருந்தால் மட்டுமே அன்றி வேறு எவராலும் ஒருவரினால் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலையத்தில் வாகனத்தை நிறுத்தி வைப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

5. 4 ஆவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பததிரத்திற்காகவும் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டண அளவை அறவிடப்படல் வேண்டும்.

6. அரசாங்க திணைக்களம் ஒன்று அல்லது கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனம் அல்லாத தனியார் குழுவினால் அல்லது சபை ஒன்றினால் காலத்திற்கு காலம் குறிக்கப்படும் மாதாந்த கட்டணம் அல்லது வருடாந்தக் கட்டணம் சபைக்கு செலுத்தப்படுமிடத்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி அத்திணைக்களத்திற்கு அல்லது தனியார் குழுவுக்கு அல்லது தனிப்பட்டவருக்குச் சொந்தமான மோட்டார் வண்டிக்கான மாதாந்த அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

7. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களும் அது வழங்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு மோட்டார் வாகனத்திற்காகவா? என்பதை அம்மோட்டார் வாகனத்தை குறிப்பிட்டுக் காட்டும் இலக்கம் குறிப்பிடப்படுவதுடன், அவ் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கால எல்லைக்குள் மட்டுமே அது செல்லுபடியாகும்.

8. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் ஒவ்வொருவரினாலும் அவ் அனுமதிப்பத்திரம் வாகனத்தில் வெளியில் தெரியக்கூடிய விதத்தில் வாகனத்தினுள் வெளியே இருந்து பார்க்கத் தெரியக்கூடிய முறையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

9. பொலிஸ் உத்தியோகத்தவர் ஒருவர் அல்லது மோட்டார் வாகன கட்டுப்பாட்டாளரினால் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பொது இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனத்தின் உரிமையாளரிடம் இல்லையேல் சாரதி ஒருவரிடம் அம்மோட்டார் வாகனத்திற்காக விநியோகிக்கப்பட்டிருக்கும் வாகனம் நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்காக சமர்ப்பிக்கும்படி வேண்டப்படும் சந்தர்ப்பத்தில், அவ் அனுமதிப்பத்திரத்தை அவ்வாகன உரிமையாளர் அல்லது சாரதியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*10.* ஏதாவது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது இடமொன்றில் குறித்த வகுப்பு அல்லது வகை அல்லது மோட்டார் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எவராவது ஒருவரினால் அவ்வகுப்பு அல்லது அவ்வகைக்குரியதல்லாத மோட்டார் வாகனமொன்றை அங்கு நிறுத்தி வைப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

*11.* வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது நிலையமொன்றிற்குள் உட்புகும் அல்லது வெளியேறும் அல்லது ஏனைய வானமொன்றிற்கு தடங்கல் ஏற்படும் வகையில் எவராவது ஒருவரினால் வாகனம் நிறுத்தி வைத்திருக்கும் பொது நிலையமொன்றில் மோட்டார் வாகனமொன்றை நிறுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

*12.* வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றிற்குள் உட்புகும் மற்றும் வெளியேறுவதற்காக வெவ்வேறான மார்க்கங்கள் அமைக்கப்பட்டு அதுபற்றி அறிவித்தல் அல்லது சமிக்கைகள், பெயர் பலகைகள் மூலம் காட்டப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த மார்க்கங்களை தவிர்ந்த ஏதாவது வாகனம் ஒன்று அவ்விடத்திற்கு உட்புகுவது அல்லது வெளியேறுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

*13.* சங்கிலி அல்லது தூண்கள் அல்லது சங்கிலி தூண்கள் போன்ற இருவகைகளையும் பயன்படுத்தியுள்ள பொது தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் அனைத்தும் அவை வருகை தந்த வரிசைக்கிரமத்திற்கு அமைய ஒன்றன் பின் ஒன்றாக முன்பாகத்தைக் காட்டி நிற்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*14.* மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் மோட்டார் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் போது எவராவது ஒருவரினால் அவ்வாகனத்தை கழுவுதல்/கழுவுவதற்கு முற்படுதல் மேற்கொள்ளப்படலாகாது.

*15.* எவராவது ஒருவரினால் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் வாகனத்திலிருந்து அகற்றுவதற்கான பணிகளுக்காக புதுப்பித்தல் செய்வது மிக அவசியமானது என்றால் மட்டுமே அன்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வானத்தில் ஏதாவது முறையொன்றினால் புதுப்பிக்கப்படும் பணியை மேற்கொள்ள முடியாது.

*16.* இத்துணைவிதியை மீறுவது தொடர்பாக விதி மீறலில் உள்ளடக்கப்பட்ட ஒரு செயற்பாடு அல்லது செய்யாது தவிர்த்தல் என்பதற்காக 750 ரூபாவிற்கு மேற்படாத தண்டத்தினால் அந்த விதி மீறலை தொடர்ந்தும் மேலும் செய்யப்படும் போது உரிய அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் அது தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பின்னர் அல்லது அம்மீறல் பற்றி கவனத்தில் கொள்ளப்பட்டு சபைத்தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர் ஒருவரினால் எழுத்துமூலம் அறிவித்தல் கையளிக்கப்பட்ட பின்னர் விதி மீறலை மேலும் தொடர்ந்து செய்து கொண்டு போகும் அனைத்து ஒவ்வொரு நாட்களுக்குமாக 250 ரூபாவிற்கு மேற்படாத மேலதிக தண்டத்திற்கு கீழ்படிதல் வேண்டும்.

*17.* இத்துணைவிதியில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இத்துணைவிதிகளில் தலைவர் எனப் பொருள்படுவது நகர சபை தலைவர் என பொருள்படும்.

''பொலிஸ் உத்தியோகத்தர்'' என்பது, பொலிஸ் பரிசோதகர் உத்தியோகத்தர் நிலைக்கு கீழ் பதவி வகிக்கும் இலங்கை பொலிஸ் சேவை பொலிஸ் உத்தியோகத்தர் என பொருள்படும் ;

''மோட்டார் வாகன கட்டுப்பாட்டாளர்'' என்பது, பொது தரிப்பிட நிலையங்களில் மோட்டார் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதற்காக சபை தலைவருக்குப் பதிலாக அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக தலைவரினால் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆள் ஒருவர் என பொருள்படும் ;

''மோட்டார் வாகனம்'' என்பது, வீதிகளில் பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இயந்திர சக்தியைக் கொண்டு இயங்கும் ஏதாவது வாகனம் என பொருள்படும் ;

''வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது நிலையம்'' என்பது, பிரதேச சபையின் ஆலோசனை உடன்பாட்டின் மூலம் பெயர் குறிப்பிடப்படும் நிலையம் என பொருள்படும்.

*10 - 325/1*

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரான என்னால் தயாரிக்கப்பட்டு இங்கு கீழே காட்டப்பட்டுள்ள துணைவிதி மேற்கூறப்பட்ட பிரிவின் கீழ் இவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும், ஒழுங்கும்,
கல்வி, காணி, மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அத்துடன்
பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மேல் மாகாண, மாகாண சபை,
“சிராவஸ்தி கட்டிட வளாகம்”,
கொழும்பு 7,
2011, செத்தெம்பர் 19.

**பிரதேச சபை எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைத்திருத்தல் அதற்கான நிலையங்களை அமைத்தல் மற்றும் வாகனங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைத்திருத்தல் அதற்கான நிலையங்களை அமைத்தல் மற்றும் அந்நிலையங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காகவுள்ள கட்டணங்களை அறவிடுதல் மற்றும் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான துணைவிதியென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இங்கு இதனகத்துப்பின்னர் தலைவராக எடுத்துக்காட்டப்படும் பிரதேச சபையின் தலைவர் அதிகார பிரதேசத்திற்குள் நுழையும் வாகனங்கள், நிறுத்திவைப்பதற்கும் அல்லது நிறுத்தி வைத்திருப்பதை தடை செய்தல் அல்லது வரையறுத்தல் இல்லையேல் கட்டுப்படுத்தும் ஏதாவது வீதியொன்று, வீதியின் பகுதி ஒன்றில் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் நிலையத்தை குறிப்பிடும் அறிவித்தல் அவ்வீதியில் இல்லையேல் வீதியின் பகுதியொன்றில் பார்க்கும் இடத்திலிருந்து தெளிவாக தெரியக்கூடிய விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியில் காட்டப்பட்டுள்ள அறிவித்தல் ஊடாக வாகனம் நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைப்பதை தடைசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் வாகனமொன்றின் சாரதியினால்,

(அ) எவராவது உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவரினால் அவ்வீதியில் அல்லது வீதியின் பகுதியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்லது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது வாகன சமிக்கைக்கு அல்லது அறிவித்தலுக்கு இசைவாக செயல்படுவதுடன் அல்லது ;

(ஆ) அவ்வீதியின் பகுதியொன்றில் அச்சந்தர்ப்பத்தில் காணப்படும் ஏதாவது வாகனமொன்றின் போக்குவரத்திற்கு ஒழுங்கு முறையிலான விதிகளை உரியமுறைப்படி பின்பற்றப்படுவதுடன் அல்லது ;

(இ) எவராவது ஒருவருக்கு அவ்வாகனத்திலிருந்து கீழே இறங்குவதற்கும் அல்லது அவ்வாகனத்தில் ஏறுவதற்கு இடமளிப்பதுடன் அல்லது ;

(ஈ) அவ்வாகனத்தில் பொருட்களை ஏற்றுவதற்கும் அல்லது அவ்வாகனத்திலிருந்து பொருட்களை இறக்குவதற்கும் அல்லது அப்பணிகளுக்காக தேவையான நேரங்களைத் தவிர்த்த ஏனைய வேலைகளில் அவ்வாகனம் வீதியில் அல்லது வீதியின் பகுதியொன்றில் நிறுத்தி வைத்திருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

4. தலைவரினால் இத்துணைவிதியின் கீழ் விநியோகிக்கப்படும் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் தம்வசம் இருந்தால் மட்டுமே அன்றி வேறு எவராலும் ஒருவரினால் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலையத்தில் வாகனத்தை நிறுத்தி வைப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

*5.4 ஆவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பதத்திரத்திற்காகவும் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டண அளவை அறவிடப்படல் வேண்டும்.*

*6. அரசாங்க திணைக்களம் ஒன்று அல்லது கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனம் அல்லாத தனியார் குழுவினால் அல்லது சபை ஒன்றினால் காலத்திற்கு காலம் குறிக்கப்படும் மாதாந்த கட்டணம் அல்லது வருடாந்தக் கட்டணம் சபைக்கு செலுத்தப்படுமிடத்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி அத்திணைக்களத்திற்கு அல்லது தனியார் குழுவுக்கு அல்லது தனிப்பட்டவருக்குச் சொந்தமான மோட்டார் வண்டிக்கான மாதாந்த அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.*

*7. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களும் அது வழங்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு மோட்டார் வாகனத்திற்காகவா? என்பதை அம்மோட்டார் வாகனத்தை குறிப்பிட்டுக் காட்டும் இலக்கம் குறிப்பிடப்படுவதுடன், அவ் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கால எல்லைக்குள் மட்டுமே அது செல்லுபடியாகும்.*

*8. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் ஒவ்வொருவரினாலும் அவ் அனுமதிப்பத்திரம் வாகனத்தில் வெளியில் தெரியக்கூடிய விதத்தில் வாகனத்தினுள் வெளியே இருந்து பார்க்கத் தெரியக்கூடிய முறையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.*

*9. பொலிஸ் உத்தியோகத்தவர் ஒருவர் அல்லது மோட்டார் வாகன கட்டுப்பாட்டாளரினால் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பொது இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனத்தின் உரிமையாளரிடம் இல்லையேல் சாரதி ஒருவரிடம் அம்மோட்டார் வாகனத்திற்காக விநியோகிக்கப்பட்டிருக்கும் வாகனம் நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்காக சமர்ப்பிக்கும்படி வேண்டப்படும் சந்தர்ப்பத்தில், அவ் அனுமதிப்பத்திரத்தை அவ்வாகன உரிமையாளர் அல்லது சாரதியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*10. ஏதாவது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது இடமொன்றில் குறித்த வகுப்பு அல்லது வகை அல்லது மோட்டார் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எவராவது ஒருவரினால் அவ்வகுப்பு அல்லது அவ்வகைக்குரியதல்லாத மோட்டார் வாகனமொன்றை அங்கு நிறுத்தி வைப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.*

*11. வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது நிலையமொன்றிற்குள் உட்புகும் அல்லது வெளியேறும் அல்லது ஏனைய வானமொன்றிற்கு தடங்கல் ஏற்படும் வகையில் எவராவது ஒருவரினால் வாகனம் நிறுத்தி வைத்திருப்பது பொது நிலையமொன்றில் மோட்டார் வாகனமொன்றை நிறுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.*

*12. வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றிற்குள் உட்புகும் மற்றும் வெளியேறுவதற்காக வெவ்வேறான மார்க்கங்கள் அமைக்கப்பட்டு அதுபற்றி அறிவித்தல் அல்லது சமிக்கைகள், பெயர் பலகைகள் மூலம் காட்டப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த மார்க்கங்களை தவிர்ந்த ஏதாவது வாகனம் ஒன்று அவ்விடத்திற்கு உட்புகுவது அல்லது வெளியேறுவது தவிர்க்கப்படல் வேண்டும்.*

*13. சங்கிலி அல்லது தூண்கள் அல்லது சங்கிலி தூண்கள் போன்ற இருவகைகளையும் பயன்படுத்தியுள்ள பொது தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் அனைத்தும் அவை வருகை தந்த வரிசைக்கிரமத்திற்கு அமைய ஒன்றன் பின் ஒன்றாக முன்பாகத்தைக் காட்டி நிற்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*14. மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் மோட்டார் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் போது எவராவது ஒருவரினால் அவ்வாகனத்தை கழுவுதல்/கழுவுவதற்கு முற்படுதல் மேற்கொள்ளப்படலாகாது.*

*15. எவராவது ஒருவரினால் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் வாகனத்திலிருந்து அகற்றுவதற்கான பணிகளுக்காக புதுப்பித்தல் செய்வது மிக அவசியமானது என்றால் மட்டுமே அன்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பொது நிலையமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வானத்தில் ஏதாவது முறையொன்றினால் புதுப்பிக்கப்படும் பணியை மேற்கொள்ள முடியாது.*

*16. இத்துணைவிதியை மீறுவது தொடர்பாக விதி மீறலில் உள்ளடக்கப்பட்ட ஒரு செயற்பாடு அல்லது செய்யாது தவிர்த்தல் என்பதற்காக 750 ரூபாவிற்கு மேற்படாத தண்டத்தினால் அந்த விதி மீறலை தொடர்ந்தும் மேலும் செய்யப்படும் போது உரிய அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றத்தினால் அது தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட பின்னர் அல்லது அம்மீறல் பற்றி கவனத்தில் கொள்ளப்பட்டு சபைத்தலைவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர் ஒருவரினால் எழுத்துமூலம் அறிவித்தல் கையளிக்கப்பட்ட பின்னர் விதி மீறலை மேலும் தொடர்ந்து செய்து கொண்டு போகும் அனைத்து ஒவ்வொரு நாட்களுக்குமாக 250 ரூபாவிற்கு மேற்படாத மேலதிக தண்டத்திற்கு கீழ்படிதல் வேண்டும்.*

*17. இத்துணைவிதியில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இத்துணைவிதிகளில் தலைவர் எனப் பொருள்படுவது பிரதேச சபை தலைவர் என பொருள்படும்.*

''பொலிஸ் உத்தியோகத்தர்'' என்பது, பொலிஸ் பரிசோதகர் உத்தியோகத்தர் நிலைக்கு கீழ் பதவி வகிக்கும் இலங்கை பொலிஸ் சேவை பொலிஸ் உத்தியோகத்தர் என பொருள்படும் ;

''மோட்டார் வாகன கட்டுப்பாட்டாளர்'' என்பது, பொது தரிப்பிட நிலையங்களில் மோட்டார் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதற்காக சபை தலைவருக்குப் பதிலாக அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக தலைவரினால் அதிகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஆள் ஒருவர் என பொருள்படும் ;

''மோட்டார் வாகனம்'' என்பது, வீதிகளில் பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இயந்திர சக்தியைக் கொண்டு இயங்கும் ஏதாவது வாகனம் என பொருள்படும் ;

''வாகனம் நிறுத்தி வைக்கப்படும் பொது நிலையம்'' என்பது, பிரதேச சபையின் ஆலோசனை உடன்பாட்டின் மூலம் பெயர் குறிப்பிடப்படும் நிலையம் என பொருள்படும்.

10 - 325/2

---

**மேல் மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 123 (1) ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 126 (viii) ''ஏ'' எனப்படும் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 122 ஆவது பிரிவில் களுத்துறை பிரதேச சபைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அப்பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட இங்கு கீழே காட்டப்பட்டுள்ள துணைச் சட்டம் 2008, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நடைபெற்ற களுத்துறை பிரதேச சபை 1 ஆம் இலக்க, பொதுச் சபை கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 123 (1) ஆவது பிரிவின் பிரகாரம் அத்துணைச்சட்டம் மேல் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அத்துடன் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
கல்வி, காணி, மின்சாரம் மற்றும் எரிசக்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அத்துடன்
பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மேல் மாகாண, மாகாண சபை,
"சிராவஸ்தி கட்டிட வளாகம்",
கொழும்பு 7,
2011, செத்தெம்பர் 19.

## களுத்துறை பிரதேச சபை

## முச்சக்கரவண்டி நிறுத்தி வைத்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி, களுத்துறை பிரதேச சபையின் முச்சக்கரவண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

2. இத்துணை விதியானது, சபையின் அதிகாரப் பிரிவினுள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல், முறைமைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் நிறுத்துமிடங்கள் தொடர்பில் கட்டணம் அறவிடுதல் பொருட்டு விதிக்கப்படுகின்றது.

3. (1) சபையின் அதிகாரப் பிரிவினுள் முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைக்கவேண்டிய இடங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கப்படவேண்டிய முச்சக்கரவண்டிகளின் உச்ச எண்ணிக்கை என்பன சபையின் தீர்மானமொன்றின் மூலம் தீர்மானிக்கப்படவேண்டியதுடன் அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்படும் அத்தகைய திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

3.(2) மேற்படி 3 (1) ஆம் துணை விதியின் நியதிகளின் பிரகாரம், தீர்மானிக்கப்பட்ட முச்சக்கரவண்டி நிறுத்தி வைக்கும் இடங்கள் மற்றும் எண்ணிக்கை என்பன திருத்தப்பட வேண்டுமென சபை கருதும் பட்சத்தில் சபை தீர்மானமொன்றின் மூலம் அவ்வாறு செய்ய முடியுமென்பதுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்படும் அத்தகைய திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

3.(3) முச்சக்கரவண்டி நிறுத்தி வைக்கும் இடத்தை தீர்மானித்தல், அதன் இடப்பரப்பை தீர்மானித்தல், நிறுத்தக்கூடிய முச்சக்கரவண்டியின் உச்ச எண்ணிக்கையை தீர்மானித்தல் என்பனவற்றின் பொருட்டு அல்லது அத்தகைய தீர்மானங்களை திருத்தும் பொருட்டு சபையானது, முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களைக் கொண்ட குழுவொன்றினது பரிந்துரையை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.(4) 3 (1) ஆம் துணை விதியின் நியதிகளின் பிரகாரம், முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டிய இடங்களை இனங்காணும் பொருட்டான அறிவித்தல் பலகை ஒன்றை ஒவ்வொரு நிறுத்தி வைக்கும் இடத்துக்கு முன்பாக நிறுவுதல் வேண்டுமென்பதுடன் நிறுத்துமிட குறியீட்டு இலக்கத்தை அறிவித்தல் பலகையில் குறிப்பிடுதலும் வேண்டும்.

3 (2) ஆம் துணை விதியின் நியதிகளின் பிரகாரம், நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கக்கூடிய முச்சக்கரவண்டிகளின் உச்ச எண்ணிக்கை உரிய அறிவித்தல் பலகையில் குறிப்பிடுதல் வேண்டும்.

3.(5) முச்சக்கரவண்டிகளை நிறுத்துமிடத்தில் முறையாக நிறுத்தி வைக்க வேண்டுமென்பதுடன் நிறுத்தி வைக்கப்படவேண்டிய விதத்தை சபையின் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 4 அங்குல அகலமான வெள்ளை அல்லது மஞ்சள் நிற கோடு ஒன்றினால் அடையாளமிடுதல் வேண்டும்.

4. முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைக்கும் பொருட்டு இத்துணைவிதியின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு அனுமதிப்பத்திரமொன்று தலைவரினால் வழங்கப்படுதலும் அதற்கான கட்டணமொன்றை விதித்து அறவிடுதலும் சட்ட ரீதியானதாகும்,

5. முச்சக்கரவண்டி நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கும் முச்சக்கரவண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது நிறுத்துமிடத்துக்கு அருகிலுள்ள வதிவாளர்களுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

6. (1) மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கு அமைய, தமது நிரந்தர வதிவிடத்துக்கு அருகே முச்சக்கரவண்டிகளை நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கும் பொருட்டான அனுமதிப்பத்திரமொன்றுக்காக பிரதேச சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக 50 ரூபா செலுத்தி விண்ணப்பப்படிவத்தை சபையிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணம், காலத்துக்குக்காலம் சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு ஏற்ப திருத்தப்படலாம்.

6.(2) முச்சக்கரவண்டியை ஓட்டுபவர் உரிமையாளர் எனின் அவரினதும், ஓட்டுபவர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதி எனின் அவரினதும் உரிமையாளரினதும் கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களின் ஒளிப்படப் பிரதிகள், விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அவ் விண்ணப்பப்படிவம் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டும்.

(i) முச்சக்கரவண்டி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரமும் ;

(ii) முச்சக்கரவண்டியின் பதிவுச் சான்றிதழ் ;

(iii) வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமும் .

6.(3) சபையின் அனுமதிப்பத்திரம்பெற்ற முச்சக்கரவண்டிகள் தொடர்பில் பதிவேடு ஒன்றை பேண வேண்டுமென்துடன், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுமிடத்து அதுபற்றி குறிப்பிட்டு சிவப்பு மையினால் அடையாளமிடுதல் வேண்டும்.

6.(4) சபையானது, முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை மாதாந்தம் அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு தடவை அல்லது வருடாந்தம் வழங்கலாம்.

6.(5) செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் ஒளிப்படப் பிரதியொன்று தெளிவாக வெளியே தெரியக்கூடியவாறு முச்சக்கரவண்டியின் முன் கண்ணாடியில் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

6.(6) முச்சக்கரவண்டியின் வலப்பக்கம் பயணிகள் ஏறாமல் அல்லது இறங்காமல் இருக்கும் வகையில் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

6.(7) அனுமதிப்பத்திரம் முச்சக்கரவண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பெயருக்கு வழங்கப்படல் வேண்டும்.

6.(8) அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான கால எல்லை முடிவடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னதாக முச்சக்கர வண்டியின் உரிமையாளர் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்தல் வேண்டும்.

6 (9) மேற்படி 6 (4) ஆம் உட் பந்தியின் கீழ் மாதாந்தம் அல்லது மூன்று மாதத்துக்கொரு தடவை அல்லது வருடாந்தம் விதிக்கப்படவுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்படும் அத்தகைய திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் அறவிடப்படுதல் வேண்டும்.

6.(10) 4 ஆம் துணை விதியின் நியதிகளின் பிரகாரம், சபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி, முச்சக்கரவண்டி நிறுத்துமிடத்துக்கு முச்சக்கரவண்டியொன்று நுழையவோ அல்லது அங்கு நிறுத்தி வைக்கவோ கூடாது.

6.(11) செல்லுபடியான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பினும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்திலிருந்து முச்சக்கரவண்டியை தற்காலிகமாக அகற்றுவதற்கு கட்டளை இடலாம் என்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் இந்த அனுமதிப்பத்திரம் தடையாக இருக்கக்கூடாது.

7. வேறு வாகனம் எதுவும் நிறுத்துமிடத்திற்கு நுழையவோ அல்லது அங்கு நிறுத்தவோ கூடாது.

8. நிறுத்துமிடத்துக்கு நுழையும் இடத்துக்கு அல்லது அங்கிருந்து வெளியேறும் இடத்துக்கு தடங்கலாகும் வகையில் முச்சக்கரவண்டிகளையோ அல்லது வேறு எந்த வாகனங்களையோ நிறுத்தி வைக்கக்கூடாது.

9. நிறுத்துமிடத்திலிருந்து முச்சக்கரவண்டிகளை அகற்றுவதற்காக தேவைப்படும் திருத்தமொன்றைத் தவிர வேறேந்த விதத்திலுமான திருத்தமொன்றை நிறுத்துமிடத்துக்குள் செய்யக்கூடாது.

10. ஏதேனும் முச்சக்கரவண்டியொன்றை நிறுத்தி வைப்பதற்காக எந்த நிறுத்திமிடம் பொருட்டு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளதோ அந்த நிறுத்துமிடம் தவிர்ந்த வேறேதும் இடத்தில் வாடகைக்கு விடும் நோக்கில் முச்சக்கரவண்டியை நிறுத்தி வைக்கக்கூடாது.

11. அனுமதிப்பத்திரமுள்ள முச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதிகள், வெளியாட்களை நிறுத்துமிடத்தில் அலைந்து திரிவதற்கு அனுமதிக்கக்கூடாது.

12. எவரேனும் ஆள், நிறுத்துமிடத்தில் போதைப்பொருள் பாவிக்கவோ அல்லது நெறியற்ற விதத்தில் நடக்கவோ அல்லது வேறேதும் குற்றச் செயல்களை செய்யக்கூடாது என்பதுடன் அத்தகைய செயல்களை செய்வதற்கு இடங்கொடுக்காமல் நிறுத்துமிடத்தை பயன்படுத்துவது அனுமதி பெற்ற ஆட்களின் பொறுப்புமாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெற்ற எவரேனும் ஆள், நிறுத்துமிடத்தில் துர்நடத்தையில் ஈடுபட்டதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெறும் பட்சத்தில், அதுபற்றி பரிசோதனை நடாத்தி உறுதிப்படுத்தப்படின் அவரின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தை இச்சபை கொண்டிருக்கும்.

14. தலைவர் அல்லது அவரால் வேளைக்கேற்றவாறு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் கேட்கும் எவ்வேளையிலும் முச்சக்கரவண்டியின் சாரதி அல்லது உரிமையாளர் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

15. (1) இத்துணை விதியிலுள்ள ஏதேனும் ஏற்பாட்டை மீறுதல் குற்றமொன்றாவதுடன் குறித்த குற்றம் தொடர்பில் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பிற்பாடு ரூபா எழுநூற்றி ஐம்பதுக்கு (ரூபா 750) மேற்படாத குற்றப்பணத்துக்கும் உட்படுதல் வேண்டும். அம்மீறல் குற்றத்தை தொடர்ந்து செய்யும் பட்சத்தில் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பிற்பாடு அல்லது அம்மீறல் குற்றம் மீது கவனத்தைச் செலுத்துமாறு எழுத்துமூல அறிவித்தலொன்றை தலைவரினால் அல்லது வேளைக்கேற்றவாறு அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தரினால் கையளிக்கப்பட்டதன் பிற்பாடு குறித்த குற்றத்தை மேலும் புரியும் ஒவ்வொரு நாள் பொருட்டு ரூபா இருநூற்றி ஐம்பதுக்கு (ரூபா 250.00) மேற்படாத மேலதிக குற்றப்பணம் அறவிடுவதற்கும் உட்படுதல் வேண்டும்.

15. (2) மேற்படி 15 (1) ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட குற்றப்பணம் சபையின் பொது நியதியத்துக்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

16. இத்துணை விதிக்கு முரணாக எது எவ்வாறாயிருப்பினும், சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் இத்துணை விதி திருத்தப்படலாம் அல்லது இதனை அழித்து புதிய துணைவிதியொன்று வகுக்கப்படலாம் அல்லது மேலதிக துணை விதியொன்று ஆக்கப்படலாம்.

17. பொருள் கோடல்.

''சபை'' என்பது, களுத்துறை பிரதேச சபை என்று பொருளாகும் ;

''தலைவர்'' என்பது, களுத்துறை பிரதேச சபையின் தலைவர் என்று பொருளாகும் ;

''தலைவரினால் வேளைக்கேற்றவாறு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்''என்பது தலைவரினால் அதிகாரமளிக்கப்படுகின்ற பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தர் என்று பொருளாகும்.

''தலைவரினால் வேளைக்கேற்றவாறு அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தர்'' என்பது, தலைவரினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர்'' என்று பொருளாகும்.

''அதிகாரப் பிரிவு'' என்பது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட களுத்துறை பிரதேச சபையினது அதிகாரப் பிரதேசம் என்று பொருளாகும் ;

''முச்சக்கர வண்டி'' என்பது, வாடகைக்கு விடும் நோக்குடன் நிறுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டி என்று பொருளாகும்.

''வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள சாரதி'' என்பது, முச்சக்கரவண்டியை ஓட்டும் உரிமையாளர் அல்லது அவ்வண்டியை ஓட்டுவதற்கென உரிமையாளரினால் அமர்த்தப்பட்ட ஆள் என்று பொருளாகும் ;

''நிறுத்துமிடம்'' என்பது, களுத்துறை பிரதேச சபையினால் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட முச்சக்கரவண்டி நிறுத்துமிடம் என்று பொருளாகும்.

''குறித்துரைக்கப்பட்ட நிறுத்துமிடம்'' என்பது, களுத்துறை பிரதேச சபைத் தலைவரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட நிறுத்துமிடம் என்று பொருளாகும்.

''மாதாந்தம்'' என்பது, ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்தில் முதலாவது திகதியிலிருந்து அந்தந்த மாதத்துக்குரிய 28 அல்லது 29 அல்லது 30 அல்லது 31 நாள்களைக் கொண்ட மாதம் என்று பொருளாகும்.

''மூன்று மாத'' என்பது, மாதாந்தம் என்பதில் வரையறுக்கப்பட்ட நாள்களின் எண்ணிக்கை சனவரி 1 இலிருந்து ஆரம்பமாகி அடுத்தடுத்து மூன்று (3) மாதங்கள் வீதம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை என்று பொருளாகும்.

''வருடாந்தம்'' என்பது, வருடத்தின் சனவரி 1 ஆந் திகதியில் ஆரம்பித்து திசெம்பர் 31 வரை முடிவடையும் பஞ்சாங்க ஆண்டு பொருளாகும்.

''பொலிஸ் உத்தியோகத்தர்'' என்பது, 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 53) 104 ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

''வேறு வாகனங்கள்'' என்பது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

''பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்'' என்பது, மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

''குற்றச் செயல்'' என்பது, தொல்லைக் கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

18. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

3 (3) ஆம் துணை விதி

நியமிக்கப்படுகின்ற வீதிக்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

1. குழுவின் தலைவர் பிரதேச சபையின் தலைவர் ஆதல் வேண்டுமென்பதுடன் செயலாளர் சபையின் அரசிறை பரிசோதகர் ஆதலும் வேண்டும்.

2. பிரதேச சபையின் செயலாளரும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும்.

3. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.

4. மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.

*5. களுத்துறை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.*


*6. களுத்துறை பஸ் கம்பனி லிமிட்டெட்டின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.*

*7. சபையின் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையத்திலுள்ள வாகனப்போக்குவரத்து பொலிஸ் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.*

*8. சபையின் அதிகாரப் பிரிவினுள் உள்ள ஒவ்வொரு முச்சக்கரவண்டி சங்கத்தின் ஒவ்வொரு பிரதிநிதி வீதம்.*

*இரண்டாவது அட்டவணை*

***4 ஆவது துணை விதி***




*13. செ. மீ. விட்டமுடைய வட்டமாகும். உள்வட்டம் நீல நிறமும் வெளிவட்டம் மஞ்சள் நிறமும் கொண்ட பிரதேச சபை இலச்சினை உடன் மாதிரியிலுள்ள விடயங்கள் அடங்கிய ஸ்ரீக்கர் ஒன்றாகும்.*

மூன்றாவது அட்டவணை

6 (2) ஆவது துணை விதி

**முச்சக்கரவண்டி நிறுத்துமிட அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. (1) விண்ணப்பகாரரின் பெயர் :-
(2) நிரந்தர வதிவிட முகவரி :-
(3) மதிப்பீட்டு வரி இலக்கம் :-
(4) நிரந்தர வதிவிடத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனம் :-
(5) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

2. (1) முச்சக்கரவண்டி பதிவு இலக்கம் :-
(2) ஓட்டுபவர் உரிமையாளரா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியா என்பது பற்றி :-

(2) (1) உரிமையாளர் எனின், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-
(2) (2) வாடகைக்கு அமர்த்தப்பட்டவர் எனின்,

(2) (2) (1) சாரதியின் பெயர் :-
(2) (2) (2) நிரந்தர வதிவிட முகவரி :-
(2) (2) (3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-
(2) (2) (4) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-

3. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் முச்சக்கரவண்டி நிறுத்துமிடம் :-

4. அனுமதிப்பத்திரம் விண்ணப்ப காலம் :- ஒரு மாதத்துக்கு/ 3 மாதங்களுக்கு/ஒரு வருடத்திற்கு

மேலே என்னால் கொடுக்கப்பட்ட தகலவ்கள் சரியானவையென வெளிப்படுத்துகின்றேன். ஏதேனும் காரணத்தினால் அத்தகவல்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் எனது முச்சக்கரவண்டி நிறுத்துமிட அனுமதிப்பத்திரம் முன்னறிவித்தல் ஏதுமின்றி இரத்துச் செய்யப்படும் என்பதை நான் அறிவேன். அத்துடன் பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டியை நிறுத்துதல் தொடர்பான துணை விதியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் இணங்குகின்றேன்.

.....................................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :.................................

திரு./ திருமதி............................................................................................................................
அவர்களுக்கு.................................................................................................................... இலக்கமுடைய முச்சக்கரவண்டியை...................................................................... கொண்ட நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை ................................................................ காலப்பகுதிக்கு வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்.

தலைவர்,
களுத்துறை பிரதேச சபை.

திகதி :..........................................

10- 326

## திருத்தம்

### மேல் மாகாண மாகாண சபை

*திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ துணைவிதிகள்*

*2011, யூலை 05 ஆந் திகதிய 1713/ 11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இரண்டாவது பந்தி பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :-*

*நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 153 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டியுள்ள அக்கட்டளைச் சட்டத்தின் 118 ஆவது பிரிவு மற்றும் 157 ஆவது பிரிவின் 9 ஆவது உப்பிரிவின் (ஆ) (இ) பந்தியில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான துணைவிதி நிறைவேற்றப்படுவதற்கு நகர சபைகளுக்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்நியம துணைவிதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்துவதற்காக மேல் மாகாணத்தின் நகர சபைகளுக்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,*
*கல்வி, காணி, மின்சக்தி மற்றும் எரிசக்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண*
*நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அத்துடன்*
*பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மேல் மாகாண, மாகாண சபை,*
*"சிராவஸ்தி கட்டிட வளாகம்",*
*சேர். மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,*
*கொழும்பு 7,*
*2011, செத்தெம்பர் 13.*

*10- 327*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.